செ.வெ.எண் : 967/2017 நாள்: 13.12.2017

# பத்திரிகை செய்தி

## வாய்மொழி குத்தகை அடிப்படையில் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கும் ஓகி புயல் பயிர் பாதிப்பு நிவாரணம் வழங்கப்படும் என மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு

ஓகி புயலால் பாதிக்கப்பட்ட பயிர்களின் கணக்கெடுப்பு வருவாய் துறை ஆவணங்களின் அடிப்படையில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை அலுவலர்கள் அடங்கிய பிர்க்கா அளவிலான குழுக்களோடு இணைந்து கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு நிறைவடையும் நிலையில் உள்ளது.

வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் இன்றி பிறர் நிலங்களில் வாய்மொழி குத்தகையாக பல்வேறு பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்து வரும் புல எண் விபரங்களுடன் கிராம நிர்வாக அலுவலர் சான்று பெற்று ஓகி புயல் பயிர் பாதிப்பு நிவாரணம் பெற தங்களது ஆதார் எண், தொலை தொடர்பு எண், பயிர் சாகுபடி விபரம், வங்கி கணக்கு புத்தக முதல் பக்க நகல் ஆகியவற்றோடு தங்களது கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலரை தொடர்பு கொண்டு அரசு வழங்கும் ஓகி புயல் பயிர் பாதிப்பு நிவாணத்தை பெற உடன் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் பயிர் பாதிப்பு இழப்பீட்டின் மதிப்பீடு தொடர்பாக வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/-சஜ்ஜன்சிங் ரா.சவான்
மாவட்ட ஆட்சித்தலைவர்
நாகர்கோவில்

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.